இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 14-06-2023

# அமித்ஷாக்கள் அறிக! 1

உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் தமிழ்நாடு வந்து சென்றுள்ளார். இனி அவர்கள் அடிக்கடி வருவார்கள். ஏனென்றால் தேர்தல் வரப்போகிறது!

2024 ஆம் ஆண்டு - அதாவது அடுத்த ஆண்டு தேர்தலைச் சந்திக்கப் போகிற கட்சி பா.ஜ.க. 2014 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருக்கிற கட்சி அது. ஒருமுறையல்ல இரண்டு முறை தொடர்ச்சியாக ஒன்றியத்தை ஆளும் வாய்ப்பைப் பெற்ற கட்சி அது. இந்தப் பத்தாண்டு காலத்தில் இந்தியாவுக்குச் செய்த சாதனைகளைச் சொல்லி உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் பேசி இருந்தால் பாராட்டி இருக்கலாம். சாதனைப் பட்டியல் அதிகமாக இருந்தால், நாமும் மலைத்துப் போயிருக்கலாம். ஆனால் அப்படி எந்தப் பட்டியலையும் அவரால் போட முடியவில்லை. இருந்தால் அல்லவா சொல்வதற்கு? ‘சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்’ என்பது தமிழ்நாட்டுச் சொலவடை!

**உள்துறை அமைச்சர் அமித்ஷா வருகை தருவதற்கு முந்தைய நாள் சேலம் செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் பா.ஜ.க. ஆட்சி மூலமாக தமிழ்நாட்டுக்குச் செய்து தரப்பட்ட சிறப்புத் திட்டங்கள் என்ன?’ என்ற கேள்வியை எழுப்பினார்கள். ஒன்பது ஆண்டுகளாக ஒற்றைச் செங்கலோடு நிற்கிறது எய்ம்ஸ் மருத்துவமனை. இந்தக் கேள்விக்காவது உள்துறை அமைச்சர் அவர்கள் முறையான பதிலைச் சொன்னாரா என்றால் இல்லை.**

“மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் பகுதி 1, 2 பணிகள் தொடங்கி விட்டது. கோவையில் ரூ.1,500 கோடி செலவில் இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட உள்ளது” என்று பதில் அளித்துள்ளார் உள்துறை அமைச்சர்.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை என்று அறிவித்தீர்களே ஏன் கட்டவில்லை என்று கேட்டால், கோவையில் இ.எஸ்.ஐ. வரப்போகிறது என்கிறார் உள்துறை அமைச்சர். புளி இருக்கா என்று கடைக்காரரிடம் கேட்டால், ‘உப்பு இருக்கிறது’ என்று சொல்வதைப் போல இருக்கிறது.

**2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அப்போதைய ஒன்றிய நிதி அமைச்சர் அருண்ஜெட்லி அவர்களால் அறிவிக்கப்பட்டது மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை ஆகும். இப்போது 2023 ஆம் ஆண்டு நடக்கிறது. இந்த எட்டாண்டு காலத்தில் என்ன செய்தீர்கள் என்பதுதான் கேள்வி. பகுதி 1 என்பது ஃபைல் போடுவது மட்டும்தானா? பகுதி 2 என்பது ஒரே ஒரு செங்கலை வைப்பது மட்டும்தானா?**

இமாச்சல பிரதேசம் பிலாஸ்பூரில் 2017 அக்டோபரில் மோடி அடிக்கல் நாட்டிய எய்ம்ஸ் கட்டி முடிக்கப்பட்டு, 2022 அக்டோபரில் திறந்தும் வைத்துவிட்டார். 2015 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பஞ்சாப் பதிண்டா எய்ம்ஸ் 2019-ம் ஆண்டே செயல்பட ஆரம்பித்துவிட்டது. மதுரையிலோ இன்னும் எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளே தொடங்கவில்லை. இதைத்தான் ஏன் என்று கேட்கிறோம்.

ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனைக்கு கூட தமிழ்நாடு தகுதி பெற்ற மாநிலம் இல்லையா? 2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லி - 2019 ஆம் ஆண்டு பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை இன்று வரை ஒற்றைச் செங்கலோடு இருக்கிறது என்றால் தமிழ்நாட்டை பா.ஜ.க. எப்படியெல்லாம் அவமானப்படுத்துகிறது என்பதை இதன்மூலமாக அறிந்து கொள்ளலாம். இந்தியாவின் மற்ற மாநிலங்களில் உருவாக்கப்படும் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு எல்லாம் இந்திய அரசு பணம் தருமாம். ஆனால் தமிழ்நாட்டில் அமையும் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு மட்டும் ஜப்பான் நாடு நிதி ஒதுக்க வேண்டுமாம். ஜப்பான் நிதி வரவில்லை என்றால் பணம் ஒதுக்க மாட்டார்களாம்.

**கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மதுரைக்கு வந்த பா.ஜ.க. தேசியத் தலைவர் நட்டா, ‘எய்ம்ஸ் மருத்துவமனையின் 95 சதவிகித கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டது’ என்று சொன்னார். வடிவேலு சொல்வாரே, ‘கிணத்தைக் காணும்யா’ என்பது மாதிரி இருந்தது இது. 95 சதவிகித பணிகள் முடிந்தது என்றால் வெள்ளை அடிக்க வேண்டியதுதான் பாக்கி என்பதைப் போல நட்டா கப்ஷா விட்டார். இப்போது அமித்ஷா பகுதி 1, 2 என்று சொல்கிறார். ஒரு வேளை நடக்காமல் போனால் எப்படி எல்லாம் தினுசு தினுசாக பொய் சொல்ல வேண்டி இருக்கிறது!**

மதுரை மாவட்டம் தோப்பூரில் 224 ஏக்கரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். 5 ஆண்டுகளாகியும் 5 கோடி ரூபாயில் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. மாநில அரசிடமிருந்து 224.24 ஏக்கர் நிலம் ஒன்றிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படவில்லை என்றாலும், 2021 ஆம் ஆண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு, மாணவர் சேர்க்கை நடைபெற்று ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரியில் வகுப்புகள் தொடங்கப்பட்டன. அதன்பிறகாவது கட்டடம் கட்டித் தர முன் வந்தார்களா என்றால் இல்லை.

*** தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்யுங்கள் என்று முதன்முதலாக 19.6.2014 அன்று தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் அனுப்பியது.**

*** இரண்டு இடங்களைத் தேர்வு செய்து 31.10.2014 அன்று தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியது.**

*** 28.2.2015 அன்று மத்திய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதிஅமைச்சர் அருண்ஜெட்லி, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும் என்று சொன்னார்.**

*** 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மதுரை உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைய நான்கு மாத காலக்கெடுவை நீதிமன்றம் விதித்தது.**

*** 2018 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுவார் என்று தேதியே குறித்தார்கள். அடிக்கல் நாட்டப்படவில்லை.**

*** 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்ததால், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி அடிக்கல் நாட்டினார் பிரதமர்.**

*** அதன்பிறகு சுற்றுச்சுவர் கட்டப்பட்டது.**

*** 2023 ஆம் ஆண்டும் அப்படியேதான் கிடக்கிறது.**

**எந்த தைரியத்தில் இவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து மேடை போட்டு பேசுகிறார்கள் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.**

- தொடரும்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.6.2023) காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது எடுத்த படம்.

### டெல்டா பகுதி விவசாயிகளின் குறுவை சாகுபடிக்கு

# மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

மேட்டூர், ஜூன் 14-

காவிரி டெல்டா பகுதி விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து நேற்று முன்தினம் (12.6.2023) தண்ணீர் திறந்து வைத்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 10.6.2023 அன்று மாலை சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், 11.6.2023 அன்று காலை சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து 11ந் தேதி மாலை சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்களால் விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சென்ற ஆண்டு குறுவை பாசனத்திற்காக அணை வரலாற்றில் சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக மே மாதத்தில் 24.05.2022 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டு குறுவை நெல் சாகுபடியில் புதிய சாதனை படைக்கப் பட்டது.

12.06.2023 அன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்ட அளவு 103.35 அடியாகவும் நீர் இருப்பு 69.252 டி.எம்.சி. ஆகவும் உள்ளது. மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவை சாகுபடிக்கு 19 வது முறையாக ஜூன் 12 அன்று பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

காவிரி டெல்டா குறுவை பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 முதல் செப்டம்பர் 15ஆம் தேதி வரை 5,26,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 125 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கு மேட்டூர் அணையில் இருந்து 99.74 டி.எம்.சி. தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 25.26 டி.எம்.சி. தண்ணீரானது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாகவும் பூர்த்தி செய்யப்படும்

குறுவை பாசனம் நாமக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 4,91,200 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 93.860 டி.எம்.சி. தண்ணீரும், கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கு 30,800 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 5.88 டி.எம்.சி. தண்ணீரும் மேட்டூர் அணையிலிருந்து தேவைப்படுகிறது.

தற்போது மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு நேற்று ஜூன் மாதம் 12ம் தேதி காலை வினாடிக்கு 3000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு, நேற்று மாலைக்குள் படிப்படியாக வினாடிக்கு 10,000 கன அடியாக உயர்த்தப்பட்டு ஜூன் மாதம் இறுதி வரை வழங்கப்படும். ஜூலை மாதத்தில் வினாடிக்கு 10,000 கன அடியிலிருந்து படிப்படியாக வினாடிக்கு 16,000 கன அடியாக உயர்த்தியும், ஆகஸ்ட் மாதத்தில் வினாடிக்கு 18,000 கன அடியாகவும் நீர் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

### சம்பா மற்றும் தாளடி பாசனம்

மேட்டூர் அணையிலிருந்து சம்பா மற்றும் தாளடி பாசனத்திற்கு, செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 12,10,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 205.60 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். இதற்கு அணையிலிருந்து 108.50 டி.எம்.சி. தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 97.10 டி.எம்.சி. தண்ணீர் பருவமழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையின் கீழ் பகுதியில் ஆற்றில் இருந்து சுமார் 155 குடிநீர் திட்டங்களின் மூலம் தினசரி 1707.63 மில்லியன் லிட்டர் தண்ணீர் 18 மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக ஆண்டு முழுவதும் எடுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 40க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்து விடப்படும் பொழுது அணை மின்நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும் மற்றும் சுரங்க மின்நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும் மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின் கீழ்பகுதியில் 7 கதவணை நீர் மின் நிலையங்கள் மூலம் 7 x 30 மெகாவாட் ஆக மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது.

மேட்டூர் அணையில் இருந்து குறுவை, சம்பா மற்றும் தாளடி பாசனத்திற்கு செப்டம்பர் மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 15,000 கனஅடி வீதமும் அடுத்த 15 நாட்களுக்கு படிப்படியாக வினாடிக்கு 20,000 கனஅடி வீதம் வழங்கப்படும். அக்டோபர் மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 22,000 கன அடி வீதமும் அடுத்த 15 நாட்களுக்கு நீர் தேவைக்கேற்ப வினாடிக்கு 15,000 கனஅடி வீதம் வழங்கப்படும். நவம்பர் மாதத்திற்கு தண்ணீர் தேவைக்கேற்ப வினாடிக்கு 10,000 கனஅடி வீதமும், டிசம்பர் மாதத்திற்கு வினாடிக்கு 10,000 கனஅடி வீதமும் ஜனவரி மாதத்திற்கு வினாடிக்கு 12,000 கனஅடி வீதமும் வழங்கப்படும். பாசன தேவையை பொருத்து அணையில் இருந்து தண்ணீர் எடுக்கும் அளவினை உயர்த்தியும் குறைத்தும் வழங்கப்படும்.

நடப்பாண்டில் காவிரி டெல்டா விவசாய பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும் நீர்பங்கீட்டில் நிலைமைக்கேற்ப தண்ணீரை முறைவைத்துப் பயன்படுத்த நீர்வளத்துறை அலுவலர்களுடன் ஒத்துழைக்குமாறும், மிக அதிக அளவு மகசூல் பெற்று பயனடையுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ.செந்தில்குமார், டாக்டர் பொன். கௌதம சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், கே.ஆர்.என். ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.இராஜேந்திரன், இரா. அருள், எஸ்.சதாசிவம், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, நீர் வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் இராமமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

### பள்ளிகள் திறப்பு!

# வாழ்வில் வெற்றி பெற அரசு துணை நிற்கும்!

## மாணவச் செல்வங்களை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூன் 14-

பள்ளிகள் திறப்பையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் “வாழ்வில் வெற்றி பெற அரசு துணை நிற்கும்! நான் துணையாக இருப்பேன்” என்று கூறியுள்ளார்.

விடுமுறை முடிந்து பள்ளி திறப்பதையொட்டி மாணவச் செல்வங்களை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**கோடை விடுமுறை முடிந்து நேற்று முதல்நாள் பள்ளிக்குச் செல்லும் மாணவச் செல்வங்களுக்கு என் வாழ்த்துகள்!**

**நன்கு படியுங்கள், படிப்போடு நில்லாமல் விளையாடுங்கள், உலகைப் புரிந்து கொள்ளுங்கள்.**



**நீங்கள் சிறகைப் பொருத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற அரசு துணை நிற்கும்! நான் உறுதுணையாக இருப்பேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படுகிறது!

# கேட்டதை கொடுக்கும் மக்கள் முதல்வராக திகழ்கிறார்!

## பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் புகழாரம்!

சேலம், ஜூன் 14–

சேலம் கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரியில் நடந்த அரசு விழாவில், மேட்டூர் பா.ம.க. எம்.எல்.ஏ. சதாசிவம் பேசுகையில்,

‘பாலமலையில் 75 ஆண்டுகள் ரோடு இல்லாமல் இருந்தது. அங்கு ரூ.25 லட்சத்தில் சாலையை முதல்வர் அமைத்துக் கொடுத்துள்ளார். எங்களை எதிர்க்கட்சியாக ஒரு போதும் அவர் பார்த்ததில்லை. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.வான மேட்டூர் தொகுதியில் மட்டும் ரூ.550 கோடியில் திட்டங்களை தந்துள்ளார். நாட்டை சிறப்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழிநடத்திக்கொண்டிருக்கிறார்.

இன்னும் ரூ.200 கோடியை மேட்டூருக்கு ஒதுக்கி கொடுக்க வேண்டும். மக்கள் முதல்வருக்கு எனது நன்றியை தெரிவிக்கிறேன்’ என்றார்.

தொடர்ந்து, சேலம் மேற்கு தொகுதி பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் பேசுகையில்,

‘தமிழக முதல்வரிடம் வைக்கும் கோரிக்கைகளை உடனே நிறைவேற்றித் தருகிறார். எனது தொகுதியில் உள்ள சிவதாபுரத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டு வந்தது. அதனை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்தேன். இதனை ஏற்று ரூ.76.5 கோடி ஒதுக்கி தந்துள்ளார்கள். போடிநாயக்கன்பட்டி ஏரியை அழகுப்படுத்த ரூ.720 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ரூ.25 கோடியில் வெள்ளிக் கொலுசு பன்மாடி கட்டிடம் கட்டப்படுகிறது.

சட்டமன்றத்தில் வைக்கப்படும் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படுகிறது.

கேட்டதை எல்லாம் கொடுக்கும் முதல்வரை பாராட்ட வார்த்தைகள் இல்லை. கேட்பதை கொடுக்கும் கிருஷ்ணனாக இருக்கும் முதல்வருக்கு நன்றி’ என்றார்.